**செய்தி வெளியீடு எண்: 784** **நாள்: 30.12.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.1.2013 அன்று சென்னையிலிருந்து நீலகிரி மாவட்டம் செல்கிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 4.1.2013 அன்று நீலகிரி மாவட்டம், எடக்காடு மட்டத்தில் நடைபெறும் குந்தா தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையின் பொன் விழாவில் தலைமையேற்று, பொன் விழா மலரை வெளியிட்டு, இண்ட்கோசர்வின் புதிய **250** கிராம் 'ஊட்டி டீ' விற்பனை மற்றும் ஆவின் விற்பனையகங்களில் 'ஊட்டி டீ' விற்பனை ஆகியவற்றை துவக்கி வைக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நீலகிரி மாவட்டம், கோடநாட்டில் சில நாட்கள் தங்கி, அங்கிருந்தபடியே அரசுப் பணிகளை மேற்கொள்வார்கள்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 30.12.2012